அந்தப் பணிகளில் நியமிப்பதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு சிந்தித்துக்கொண்டிருக்கிறது. நிச்சயமாக வருங்காலங்களிலே, அரசு அதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 184, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

184—

இருவழிச் சாலை

***574—திரு. துரை. சந்திரசேகரன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி, வல்லம்–கள்ளபெரமூர் சாலையை இருவழிச் சாலையாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில். எப்போது?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் நெடுஞ்சாலைத் துறை, கட்டுமானம் மற்றும் பராமரிப்புக் கோட்டத்தின் கட்டுப்பாட்டிலுள்ள மாவட்ட இதர சாலையான வல்லம்–கள்ளபெரமூர் சாலை 11 கிலோ மீட்டர் நீளமுடையது. இந்தச் சாலை 3.60 கிலோ மீட்டர் நீளம், 5.50 மீட்டர் அகலம் உடைய இடைவழித் தடமாக உள்ளது. எஞ்சியுள்ள 7.40 கிலோ மீட்டர் சாலை 3.75 மீட்டர் அகலத்தில் அமைந்துள்ள ஒருவழித் தடமாகும். இந்தச் சாலையின் போக்குவரத்து செறிவு 5,844 PCU *ஆக உள்ளதால், இச்சாலையை இருவழிச் சாலையாக தரம் உயர்த்த போதுமான போக்குவரத்து செறிவு இல்லாததால், அகலப்படுத்தும் நிலை எழவில்லை.*

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. சந்திரசேகரன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.*

2022 ஏப்ரல் 27]

திரு. க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்பிற்கினிய தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, தஞ்சை மாவட்ட மக்களின் சார்பில் முதலில் என் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும் என்ற பழமொழிக்கிணங்க, தஞ்சையில் களிமேடு ஊராட்சியில் இன்று நடைபெற்ற அப்பர் 94–வது திருவிழா நிகழ்ச்சியின்போது நிகழ்ந்த கோர விபத்தின் காரணமாக இறந்துபோன 11 பேருக்கு தலா 5 இலட்சம் ரூபாயை வழங்கி அவர்களுடைய துயர் துடைத்திருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம், காயமடைந்த 16 பேருக்கும் ஏதாவது உதவி செய்திட வேண்டுமென்ற என்னுடைய கோரிக்கையையும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வல்லம்–கள்ளபெரமூர் சாலையானது, பொதுமக்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள், விவசாயிகள் பெரிதும் பயன்படுத்தும் சாலையாகும். குறுகலாக உள்ள அந்தச் சாலையை இருவழிச் சாலையாக அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 11 கி.மீ. உள்ள அந்தச் சாலை 3.60 கி.மீ. நீளம், 5.50 மீ. அகலம் கொண்ட இடைவழித் தடமாக உள்ளது. எஞ்சியிருக்கிற 7.40 கி.மீ. நீளமுள்ள சாலையை ஒருவழித் தடத்திலிருந்து இருவழித் தடமாக தரம் உயர்த்தும்போது முன்னுரிமை அளித்து, அந்தச் சாலை அமைக்கப்படும். போக்குவரத்து செறிவைப் பொறுத்துதான் அந்தச் சாலையை இருவழிச் சாலையாக அமைக்க முடியும். வருங்காலங்களில் போக்குவரத்து செறிவுக்கேற்ப, அகலப்படுத்துவதற்கு இந்த அரசு முன்னுரிமை அளிக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம் அவர்கள். (குறுக்கீடு) ஒரு கேள்விதான் உங்களுக்கு. ஒரு கேள்விதான் கேட்க வேண்டும். பிறகு கை தூக்குங்கள், உங்களுக்கு வாய்ப்பு தருகிறேன். உட்காருங்கள். உங்களுக்கு வாய்ப்பு தருகிறேன்.*

திரு. இரா. மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை–மணப்பாறைக்கிடையே இரயில்வே மேம்பாலம் கட்டப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனது மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்திற்கு பதிலளிக்கையில் அறிவித்திருக்கிறார்கள். அதற்காக குளித்தலை தொகுதி மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மணப்பாறை, குளித்தலை, முசிறி, துறையூர், பெரம்பலூர் இருவழிச் சாலை நான்குவழிச் சாலையாக மாற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டு, கடந்த ஆட்சிக் காலத்தில் திட்டம் தீட்டப்பட்டு, அந்தச் சாலையை அளவெடுக்கும் பணிகள் நடைபெற்றிருக்கின்றன. அந்தத் திட்டம் எப்போது நடைபெறும்? அந்த இருவழிச் சாலை நான்குவழிச் சாலையாக எப்போது செயல்பாட்டிற்கு வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள், இருவழிச் சாலையை நான்குவழிச் சாலையாக மாற்ற முடியுமா? சென்ற ஆட்சிக் காலத்தில் அதற்கான திட்ட மதிப்பீடுகளெல்லாம் தயார் செய்யப்பட்டு, கோப்புகள் நிலுவையில் இருக்கின்றன, இப்பணி விரைவில் நிறைவேற்றப்படுமா என்று கேள்விக் கணைகளை இந்த அவையில் தொடுத்திருக்கிறார்கள். அது சம்பந்தமான கடிதத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னிடத்தில் நேரடியாகக் கொண்டுவந்து கொடுப்பாரேயானால், துறையின் சார்பாக தலைமைப் பொறியாளரை அழைத்து, இந்த ஆண்டே அப்பணிகளை எடுத்துக் கொள்ளலாமா அல்லது அடுத்த ஆண்டு எடுத்துக்கொள்ள முடியுமா அல்லது அரசின் நிதிநிலை எப்படி உள்ளது என்பதை அறிந்து அதற்கான உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராசேந்திரன் அவர்கள்.

திரு. சபா. இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலி தொகுதி வழியாகச் செல்லும்

2022 ஏப்ரல் 27]

குள்ளஞ்சாவடி—விருத்தாசலம் சாலை 47 கி.மீ. தூரம் உள்ள MDR *சாலை ஆகும். இந்தச் சாலை கடலூர் தேசிய நெடுஞ்சாலையான கடலூர்—விருத்தாசலம் சேலம்* NH *532 சாலையில், 13—வது கி.மீ., குள்ளஞ்சாவடியில் பிரிந்து, சத்திரம், வேகாகொல்லை, மருங்கூர், மானடிக்குப்பம், முத்தாண்டிக்குப்பம், பேர்பெரியான்குப்பம், காட்டுக்கூடலூர் வழியாக, 53—வது கி.மீ.—ல். . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. சபா. இராசேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எண் 532 தேசிய நெடுஞ்சாலையில் 53—வது கி.மீ—ல் சேருகிறது. இந்த இடத்தில் தற்போது போக்குவரத்து செறிவு அதிகமாக இருக்கிறது. அந்த கிராம ஊராட்சியில் இருப்பவர்களும், கடலூரிலிருந்து விருத்தாசலம் செல்லும் பொதுமக்களும், ஏன் கடலூர் மாவட்ட நிருவாகமே, மாவட்ட ஆட்சித் தலைவர் உட்பட அனைவரும் இந்தச் சாலையினைப் பயன்படுத்துகின்ற காரணத்தினால், போக்குவரத்து அதிக அளவில் இருக்கிறது. ஏற்கெனவே துறையின் சார்பில் அரசுக்குக் கருத்துருவும் அனுப்பப்பட்டிருக்கிறது. எனவே, மேற்கண்ட* MDR *சாலையினை, மாநில நெடுஞ்சாலையாக தரம் உயர்த்தி இருவழிச் சாலையாக மாற்றிக் கொடுப்பாரா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு, அமைகிறேன்.*

முற்பகல் 10—40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குள்ளஞ்சாவடி—விருத்தாசலம்—முத்தாண்டிக்குப்பம், காட்டுக்கூடலூர் சாலை என்பது, 47 கிலோ மீட்டர் சாலை என்று நமது சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அது ஏற்கெனவே* NH *532—ல் குள்ளஞ்சாவடியிருந்து பிரிந்து, பல்வேறு கிராமங்களையெல்லாம் இணைத்து, மீண்டும்* NH *சாலையிலேயே வந்து இணைகிறது. அது, கிட்டத்தட்ட 47 கிலோ மீட்டர் தூரம் உடையது. அது இப்போது,* MDR *சாலையில், அதாவது மாவட்ட இதர சாலையில் இருக்கிறது. எனவே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்டதையே மையமாக*

வைத்துக்கொண்டு, சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளரை அழைத்து, இந்த ஆண்டே திட்டத்தில் சேர்க்க முடியுமா என்பதை ஆலோசனை செய்து, அரசு அதற்குரிய நடவடிக்கையை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தளி தொகுதியில், தளியிலிருந்து ஓசூர் செல்கின்ற சாலை,* ODR *சாலை, 25 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. ஓசூர்–தளிக்கு இடையே* TVS, MINDA, TAAL, Ather Energy *போன்ற பல்வேறு தொழிற்சாலைகள் இருக்கின்றன. அதைப்போல, ஐந்திற்கும் மேற்பட்ட கல்வி நிறுவனங்கள் இருக்கின்றன. காலை, மாலை நேரங்களில் அச்சாலை வழியாக மாணவர்களும், தொழிலாளர்களும் செல்வதால் அடிக்கடி போக்குவரத்து நெரிசலும், விபத்துகளும் ஏற்படுகின்றன. ஆகவே, அந்தச் சாலையை நான்குவழிச் சாலையாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாற்றித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள், அவருடைய மானியக் கோரிக்கையில் உரை நிகழ்த்துகிறபோது, ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். ஓசூர் போன்ற பகுதிகளில் பெருந்தொழிற்சாலைகள் எல்லாம் இருக்கின்றன. தற்போது அந்தத் தொழிற்சாலைகள் இருக்கிற பகுதிகளிலே இருவழிச் சாலைகளையெல்லாம் நான்குவழிச் சாலைகளாக ஆக்க வேண்டும். ஏனென்று சொன்னால், தொழிலாளர் பெருமக்களால் அங்கே உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களையெல்லாம் ஏற்றிச் செல்கின்ற கனரக வாகனங்களின் பயன்பாட்டிற்கு, அவற்றை நான்குவழிச் சாலைகளாக ஆக்க வேண்டுமென்று இந்த அரசின் சார்பாக திட்டங்கள் இருக்கின்றன என்று அவருடைய உரையிலே சொன்னார்கள். அதைப் பல்வேறு நிலைகளிலே கணக்கெடுத்து, எங்களுடைய துறைக்கு அனுப்பியிருக்கிறார்கள். அவற்றில், ஓசூரும் ஒன்று. எனவே, இந்த ஆண்டே அதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, அதை நான்குவழிச் சாலையாக ஆக்குவதற்கு, இந்த அரசு முன்வரும்.*

2022 ஏப்ரல் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.*

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்கு உள்ளே வருவதற்கும், வெளியே செல்வதற்கும் போக்குவரத்து நெரிசலால் மக்கள் மிகவும் அவதிப்படுகின்றனர். செங்கல்பட்டு வழியாக வந்தாலும், இதே நிலைமைதான். ஸ்ரீபெரும்புதூர் வழியாக வந்தாலும் இதே நிலைமைதான். செங்கல்பட்டு வழியாக, இரண்டு பக்கமும் ஆறுவழிச் சாலையாக மாற்றினால்கூட, இந்தப் போக்குவரத்து நெரிசல் தீராது. எனவே, ஒரு நீண்டகால திட்டமாக, செங்கல்பட்டிலிருந்து வண்டலூர் வரைக்கும், ஸ்ரீபெரும்புதூரிலிருந்து மதுரவாயல் வரைக்கும் உயர்மட்டப் பாலம் அமைக்கின்ற திட்டம் அரசுக்கு இருக்கின்றதா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் தலைவர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள் குறிப்பிட்டதுபோல, சென்னையிலிருந்து, குறிப்பாக தாம்பரத்திலிருந்து செங்கல்பட்டிலுள்ள பரனூர்* toll gate *வரைக்கும் இருக்கிற இந்தப் பகுதியில்தான் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கிறது. ஏனென்றால், உளுந்தூர்பேட்டையிலிருந்து வருகின்றவர்கள் செங்கல்பட்டிற்கு விரைந்து வந்துவிடுகின்றனர். ஆனால், செங்கல்பட்டிலிருந்து சென்னைக்கு வருகின்றபோது, பெரும்பான்மையாக, தென்மாவட்டங்களிலிருந்து வருகின்ற அத்தனை வாகனங்களும் சரி, ஒன்றரை மணி, இரண்டு மணி நேரம் எடுத்துக்கொள்கின்றன என்பதை அரசு அறிந்திருக்கின்ற காரணத்தினால்தான், செங்கல்பட்டிற்கும், தாம்பரத்திற்கும் இப்போது விரிவான பாதைகள் அமைக்கின்ற பணிகள் இருந்தாலும்கூட, இதற்கு ஒரு மேல்மட்டச் சாலை அமைக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில் ஒரு திட்ட மதிப்பீடு தயார் செய்து, ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு டெல்லிக்குச் சென்றபோது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் ஒன்றிய அரசாங்கத்திடம் இதுசம்பந்தமாக வலியுறுத்தியுள்ளார்கள்.*

ஆக, செங்கல்பட்டிற்கும், தாம்பரத்திற்கும் மேல்மட்ட சாலை அமைக்கப்பட வேண்டுமென்ற கருத்துரு இன்றைக்கு இருக்கிறது. அதை வலியுறுத்தி கடிதமும் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது ஒன்று.

அதேபோன்று, மேற்குப் பகுதியில் பூந்தமல்லியிலிருந்து ஸ்ரீபெரும்புதூர் வரை இதே நிலைதான் இருக்கிறது. செங்கல்பட்டிற்கும், தாம்பரத்திற்கும் என்ன நிலை இருக்கிறதோ, அதே நிலைதான் இந்தப் பகுதியிலும் இருக்கிறது. எனவே, பூந்தமல்லியிலிருந்து ஸ்ரீபெரும்புதூர் வரை மேல்மட்ட சாலை அமைக்கப்பட வேண்டுமென்ற கருத்துருக்கள் எல்லாம் தயார் செய்யப்பட்டு, இந்த இரண்டு பகுதிகளிலும் மேல்மட்ட சாலை அமைக்கப்பட வேண்டுமென்று ஒன்றிய அரசாங்கத்திற்கு கடிதம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களும், இதற்கு முன்னுரிமை அளித்து, இந்த ஆண்டே எடுக்க முடியுமா, DPR தயார் செய்யலாமா என்கின்ற நிலையிலே இப்போது இருக்கிறார்கள். இந்த அரசாங்கம் இதனைத் தொடர்ந்து வலியுறுத்தி கொண்டு வருவதற்கு அத்தனை முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள். சுருக்கமான கேள்வி, சுருக்கமான பதில்.*

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழநியிலிருந்து வண்டிவாய்க்கால், நெய்க்காரப்பட்டி பேரூராட்சி வழியாக கொழுமம் செல்லுகிற மிக பிரதானமான சாலையை அகலப்படுத்தி, மேம்படுத்திட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சுருக்கமான கேள்வி, சுருக்கமான பதில் என்று குறிப்பிட்டார்கள். கேள்விதான் சுருக்கமாகக் கேட்க முடியும். பதிலை விரிவாகச் சொன்னால்தான் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் மனநிறைவடைவார்கள். அந்த அடிப்படையிலே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற*

2022 ஏப்ரல் 27]

கேள்வி குறித்து ஏற்கெனவே கடிதம் கொடுத்திருக்கிறார். அது ஆய்வில் இருக்கிறது. எவ்வளவு விரைவாக அதனைச் செய்து முடிக்க முடியுமோ, அவ்வளவு விரைவாக இந்த அரசு செய்து முடிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 185, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. செந்தில் குமார், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

185—

தொழிற்பூங்கா

***11987—திரு. கோ. செந்தில் குமார்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாணியம்பாடி தொகுதி, மல்லகுண்டா ஊராட்சியில் தொழிற்பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வாணியம்பாடி தொகுதியை உள்ளடக்கிய திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி வட்டம், மல்லகுண்டா மற்றும் குருபவானிகுண்டா கிராமங்களில் தொழில் பயன்பாட்டிற்குத் தகுதியுள்ள அரசுப் புறம்போக்கு நிலம் உள்ளதா என்பதைக் கண்டறியும் பணி நடைபெற்று வருகிறது. மேற்படி தகுதிகளுடன்கூடிய போதிய அரசுப் புறம்போக்கு நிலம் இப்பகுதியில் கண்டறியப்படும்பட்சத்தில் இங்கு சிப்காட் நிறுவனம்மூலம் ஒரு தொழிற்பூங்கா அமைப்பது குறித்து பரிசீலித்து முடிவெடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. செந்தில் குமார் அவர்கள்.*

திரு. கோ. செந்தில் குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு வணக்கம். எனது வாணியம்பாடி தொகுதி, புதிதாக உருவாக்கப்பட்ட திருப்பத்தூர் மாவட்டத்தின் மையப் பகுதியாகும்.*